பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 02 | வெள்ளிக்கிழமை | 16.01.2026 | அதிர்வு 169

## அநுர மீது மக்கள் அதீத நம்பிக்கை

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



"எமது மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின் 06



# யாழ்.மக்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையைச் சிதைக்கமாட்டோம்!

## பொங்கல் விழாவில் ஜனாதிபதி உறுதிமொழி

"கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எம் மீது நம்பிக்கை வைத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தை முதன் முறையாக வெற்றிகொள்ள வைத்துள்ளீர்கள். நீங்கள் எம் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை சிறிதளவாவது வீழ்ச்சியடைய இடமளிக்காது இனவாதமற்ற தேசிய ஒற்றுமை மிக்க நாட்டை உருவாக்குவோம்."

- இவ்வாறு யாழ்ப்பாணம் மக்கள் முன்னிலையில் நேற்று உறுதியளித்தார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. 06








யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு எதிராக விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்காமல், ஒரு தலைப் பட்சமாக யாழ் மாவட்ட நீதிமன்றம் விலக்கியமையை ஆட்சேபித்து, யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடக்கு மாகாண மேன்முறையீட்டுக்கான மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு மற்றும் மேன்முறையீட்டு மனு ஆகியவை இன்று நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

நீதிபதிகள் ரியாஸ், இராமக்கமலம் ஆகியோர் முன்னிலையில் இந்த மனு இன்று எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நீதிமன்ற விடுமுறைகளுக்கு மத்தியில் இன்று இந்த மன்று கூடுமா, இரண்டு மனுக்களும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு ஏதேனும் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமா என்பதை இன்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த இரண்டு மனுக்களையும் தாக்கல் 06









# ஜனாதிபதி அநுரவின் தலைமையில் வடக்கு மாகாண தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம், வேலணை, ஐயனார் கோயில் விளையாட்டு மைதானத்தில் நேற்று பிற்பகல் வடக்கு மாகாண தைப் பொங்கல் விழா நடைபெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் இந்த விழா இடம்பெற்றது.

வடக்கு மாகாண விவசாயம் மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் அமைச்சால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சருமான இ.சந்திரசேகர், வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெ.றஜீவன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்கள், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



















# மானிப்பாயில் நடைபெற்ற ‘பொங்கல் சங்கமம்’ நிகழ்வு

## பிரதம அதிதியாக ஜனாதிபதி பங்கேற்பு

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் வடக்கு மாகாண சுற்றுலாத்துறைப் பணியகத்தின் ஏற்பாட்டில், தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மிக விமர்சையாக ஏற்பாடு செய்யப்பட்ட “பொங்கல் சங்கமம் - 2026” நிகழ்வு, நேற்று வியாழக்கிழமை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்டார்.


























## அலரி மாளிகையில்

# பிரதமர் ஹறிணி தலைமையில் தேசிய தைப்பொங்கல் நிகழ்வு

உழைப்பின் கண்ணியத்துக்கும் இயற்கையிடமிருந்து கிடைத்த பாதுகாப்புக்கும் நன்றியை வெளிப்படுத்தும் ஓர் உன்னத கலாசார பாரம்பரியத்தைக் குறிக்கும் வகையில், உலகவாழ் தமிழ் மக்கள் கொண்டாடும் தைப்பொங்கல் பண்டிகையின் தேசிய விழா பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் அலரி மாளிகையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தத் தைப்பொங்கல் விழாவை பிரதமர் அலுவலகம், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் பிரதமர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரின் தலைமையில் தைப்பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றதுடன், இந்த விழாவில் இந்து கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் பல்வேறு கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் ஜனாதிபதியின் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியை முன்வைத்து கருத்துத் தெரிவித்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, “இந்த நிகழ்வு தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான கொண்டாட்ட நிகழ்வு. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட பல துறைகளின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தைப்பொங்கல் கொண்டாட்டம் நம் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்தத் தைப்பொங்கல் தினத்தில், இலங்கை தேசத்தை கட்டியெழுப்ப பாடுபடும் அனைத்து இலங்கையர்களுக்கும், உலக மக்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், இந்த வருட தைப்பொங்கல் தினத்தில், ஒற்றுமை, பரஸ்பர மரியாதை மற்றும் ஒவ்வொரு சமூகத்தின் கலாசார மற்றும் மத உரிமைகளைப் பாதுகாப்பதன் அடிப்படையில் ஒரு இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான உறுதியுடன் செயற்பட அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுப்பதாகக் குறிப்பிட்டார்.

தைப்பொங்கல் கொண்டாட்டத்தின் முக்கிய சாரமாக விளங்குவது, பொறுமை மற்றும் சூழல் மீதான மரியாதை ஆகிய முக்கிய பண்புகளுடன், ஒரு நாடாக முன்னேறுவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

நாடு புதியதோர் யுகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், கொள்கை மற்றும் மனப்பான்மை சீர்திருத்தங்கள் மூலம் நாட்டை இயல்பு நிலைக்கு மீட்டெடுக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இது சவாலானது என்றாலும், அது ஒரு அத்தியாவசிய பணி என்றும் பிரதமர் கூறினார்.

“தைப் பொங்கல் பண்டிகை, ஒற்றுமையின் முக்கியத்துவத்தையும், இயற்கையுடனான நமது தொடர்பையும், நமது அன்றாட வாழ்வில் நன்றியுடன் இருப்பதன் மதிப்பையும் நமக்கு நினைவூட்டுகின்றது. இன்று இந்தத் தேசிய தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இந்த நிகழ்வில் பங்கேற்ற உங்கள் அனைவருக்கும் மற்றும் அனைத்து இந்து சமூகத்திற்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.” – என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மகாசங்கத்தினர் மற்றும் இந்து சமயத் தலைவர்கள் உட்பட சர்மதத் தலைவர்கள், அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள், சிறப்பு அதிதிகள், இந்து பக்தர்கள் மற்றும் பாடசாலை பிள்ளைகள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.















# பிளவுகளைக் கடந்து அனைவரும் ஒன்றிணைந்து முன்னேறுவோம்!

## தைப்பொங்கல் விழா நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உரை

“உலகெங்கும் வாழும் இந்து மக்கள் தங்கள் அறுவடைக்கு பங்களிக்கும் சூரியன், விவசாயிகள் மற்றும் பசுக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றனர். அறுவடைக்கு உதவும் சூரியனுக்கு, விவசாயிகளுக்கு, பசுக்களுக்கு நன்றி செலுத்தும் தைபொங்கல் பண்டிகையில் நாம் அனைவரும் ஒன்றுபடுவதை காண்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இது இயற்கையோடு இணைந்த பண்பாட்டையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது. தைப்பொங்கல் பண்டிகை மக்களின் நன்றியுணர்வு கலாசாரத்தை வளர்க்கும் நம்பிக்கையை ஊக்குவிப்பதோடு, அமைதி, ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றது.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தைப்பொங்கல் விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“தென்னிந்தியாவை மையமாகக் கொண்டு தொடங்கிய இந்தப் தைப்பொங்கல் பண்டிகை, சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துவதன் மூலம் கனமழை பொழிந்து மனித வாழ்விற்கு எண்ணற்ற நன்மைகளைப் பெற்றுத் தரும் என்று மக்கள் நம்புகின்றார்கள்.

சீரான அறுவடையைப் போல சீரான தொடக்கமும் இதன் மூலம் நிகழ்கின்றது.

சூரிய தெய்வத்துக்காக வணங்கி வழிபடுதல், விவசாயத்துக்கு உதவும் அனைத்து செயல்களையும், பசு வளத்தின் மதிப்பைப் பாராட்டுதலும் விவசாயிகளுக்கு நன்றி செலுத்துதலும் இந்தப் பண்டிகை மூலம் எடுத்தியம்பப்படுகின்றது. இதுவே செழிப்பு, வளம், ஒற்றுமை, நட்பு மற்றும் அனைவருக்கும் சௌபாக்கியத்தைக் கொண்டு வருகின்றது.

நமது நாடு கடந்த காலங்களில் நான்கு பெரும் துயர் சம்பங்களை எதிர்கொண்டது. இதனால் மக்களின் வாழ்க்கை நிலை குலைந்து போயுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நடைமுறை ரீதியிலான சகல நடவடிக்கைகளையும் எடுக்க நாம் தயார்.

செழிப்பு, வளங்கள், நன்மைகள், செல்வம் மற்றும் வருமானம் ஆகியவற்றின் விடியல் சமமாகப் பகிரப்படும் கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். இன, மத வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், ஒரு நாடாக அமைதி, ஒற்றுமை, நட்புறவின் மூலம் பொதுவான இலக்கை நோக்கிச் செல்வதை நாம் இலக்காகக் கொள்ள வேண்டும்.” – என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்துள்ள மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையிலான குழுவினர் இன்று மன்றில் முன்னிலை யாகி வாதங்களை சமர்ப்பிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடைநிறுத்தப்பட்ட தடை உத்தரவை தொடரும்படியான வழிகாட்டுதல் எதனை யும் வடக்கு மாகாணத்துக்காக மேன் முறையீட்டுக்குரிய மேல்நீதிமன்றம் வழங்குமா என்பதை இன்று பொறுத் திருந்து பார்க்கலாம்.

* * *

பிரஜாசக்திஎன்றகட்டமைப்புநியமனங் கள் மூலம் உள்ளூராட்சி சபைகளுக்குப் போட்டியாக – சமாந்தரமாக – நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றைத் தன்னுடைய கட்சிக் காரர்களை வைத்து முன்னெடுக்கத் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்து வருவது பலத்த சர்ச்சையை உருவாக்கி இருக்கின்றது. குறிப்பாக வடக்கு, கிழக் கில் உள்ளூராட்சி சபைகளைத் தமிழ் கட்சிகளிடம் இழந்துவிட்ட நிலையில் அவற்றை தமது கட்சிக்காரர்கள் மூலம் நிர்வகிப்பதற்காக இத்தகைய மூன்றாம் தரக் கட்டமைப்பு ஒன்றை நாசூக்காக தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்கின்றது என்பது வெளிப்படையானது.

இதற்கு எதிராக நீதிமன்றத்துக்கு போகப் போகின்றோம் என்ற அறி விப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நேற்று வெளியிட்டு விட்டார்.

வழக்கை எப்படி முன்கொண்டு சொல் லப் போகின்றார் என்ற விடயத்தை அவர் வெளிப்படுத்தவில்லை. அரசின் நடவடிக்கை எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திலோ உயர் நீதிமன்றத்திலோ ரிட் மனு தாக்கல் செய்வாரா? அல்லது உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு மூலம் நியாயம் கோருவாரா என்பது தெரியவில்லை.

ஆயினும்,தேசியமக்கள்சக்திஜே.வி.பி. ஆக இருந்து கொண்டு இருபது ஆண்டு களுக்கு முன்னர் முன்னெடுத்த சட்ட வாதத்தை அதற்கு எதிரான ஆயுதமாகத் தாம் பயன்படுத்த போகின்றார் என்பதை சுமந்திரன் கோடி காட்டி இருக்கிறார்.

2004 இல் ஆழிப்பேரலைகள் தாக் கிய போது அதனால் ஏற்பட்ட பேரிடர் பாதிப்புகளை நிவர்த்தி செய்து, மீள்கட் டுமானங்கள் மற்றும் புனரமைப்புப் பணி களை முன்னெடுப்பதற்காக அப்போதைய சந்திரிகா அரசு, வடக்கு – கிழக்கைக் கட்டுப் பாட்டில் வைத்திருந்த விடுதலைப் புலி களோடு ஓர் இணக்க உடன்பாட்டுக்கு வந்தது.

சுனாமிக்குப் பிந்திய செயல்பாட்டு முகாமைத்துவ அமைப்பு (PTOMS) என்று அது அழைக்கப்பட்டது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் சர்வதேச சுனாமி நிவாரண நிதியை நிர்வகிக்கவும் விநி யோகிக்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு கூட் டுப் பொறிமுறை இதுவாகும். இது, சுனாமி யால் பெரிதும் பாதிக்கப்பட்ட விடுதலை புலிகளின் பிரதேசத்தில் நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு செய்யப்பட்ட ஓர் ஒழுங்கு நடவடிக்கை யாகும். இது ஒரு சமாதான ஒப்பந்தம் அல்ல. மாறாக, மனிதாபிமான உதவியை மையமாகக் கொண்ட ஒரு தற்காலிக நிர்வாக ஏற்பாடு.

இப்போது அதிகாரத்தில் இருக்கும் ஜே.வி.பி. அந்தச் சமயத்தில் – பேரின வாத மேலாதிக்கச் சிந்தனையில் – இந்தக் கட்டமைப்பு ஏற்பாட்டுக்கு எதிராக உயர்நீதி மன்றுக்குச் சென்றது.

இலங்கை அரசாங்க நிர்வாகத்துக்குச் சமாந்தரமாக, இன்னொரு நிர்வாகக் கட்ட மைப்பை அரசாங்கத்தின் இணைக்கத் தோடு கூட நடைமுறைப்படுத்த முடியாது என்று உயர் நீதிமன்றத்தை அப்போது தீர்ப்பளிக்க வைத்தது ஜே.வி.பி.

ஜே.வி.பி. அன்று உயர் நீதிமன்றத்தை தீர்ப்பளிக்க வைத்த அதே சட்ட நீதியைத் தான், இப்போது அதே ஜே.வி.பி. கொண்டு வரும் பிரஜா சக்தி முறைமைக்கு எதிரான சட்ட அஸ்திரமாக சுமந்திரன் கையில் எடுக்க முயற்சிக்கிறார்.

அன்றைய சந்திரிகா அரசாங்கம் நினைத்தாலும்அரசாங்கக்கட்டமைப்புக்கு புறம்பாக ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஏற் படுத்த முடியாது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த அதே அடிப்படையில், இப் போது தேசிய மக்கள் மத்திய அரசு நினைத்தாலும் அரசாங்கக் கட்டமைப் புக்கு சமாந்தரமாக இன்னொரு பிரஜா சக்தி கட்டமைப்பை அரசாங்கத்தால் முன் னெடுக்க முடியாது என்ற சட்ட வாதத்தை நீதிமன்றத்தில்வலிமையாகப்பயன்படுத்த சுமந்திரன் விழைகிறார் என்பது அவரது நேற்றைய ஊடகப் போட்டியில் தெளிவாகி இருக்கின்றது.

அன்று புலிகள் விவகாரத்தில் தான் பேசிய அதே தத்துவ நிலைப்பாட்டை, இன் றைய உயர்நீதிமன்றம் ஜே.வி.பி. விட யத்தில் பின்பற்றி நிற்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## யாழ்.மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“எந்த மொழியைப் பேசினாலும், எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அனைத் துப் பிரஜைகளும் கௌரவத்துடன் வாழக் கூடிய இனவாதமற்ற, தேசிய ஒருமைப் பாடு நிறைந்த வளமான நாட்டை கட்டியெ முப்புவதே தேசிய மக்கள் சக்தி அரசின் நோக்கம்.” – என்றும் அவர் சுட்டிக்காட்டி னார்.

யாழ்ப்பாணம், வேலணை, ஐயனார் கோயில் விளையாட்டு மைதானத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற வடக்கு மாகாண தைப்பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்று கையில்,

“தமிழ் மக்களின் முக்கியமானதொரு கலாசார தினமாக தைப்பொங்கல் தினத் தில் உங்களுடன் இணைவதற்கு வாய்ப் புக் கிடைத்தமையைப் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

கடந்த காலங்களில் பல்வேறு இடங்க ளில் இனவாத மோதல்கள் மற்றும் இன வாத போக்குகள் இடம்பெற்றன. இனவாத மற்ற தேசிய ஒற்றுமை நிறைந்த வள மான நாடே எமக்குத் தேவை.

எங்கு பிறந்தாலும் எந்த மொழி பேசினா லும் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் எத்தகைய கலாசாரச் சூழலில் வாழ்ந் தாலும் அனைவருக்கும் எமது நாட்டில் கௌரவமான பிரஜையாக வாழ்வதற் கான சூழலை ஏற்படுத்துவதே எமது அபி லாஷையாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எம் மீது நம்பிக்கை வைத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தை முதன்முறையாக வெற்றி கொள்ள வைத்துள்ளீர்கள். நீங்கள் எம் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை சிறிதளவாவது வீழ்ச்சிய டைய இடமளிக்காது. இனவாதமற்ற தேசிய ஒற்றுமை மிக்க நாட்டை உருவாக்கு வோம். உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க எதிர்பார்க்கின் றோம். அனைவருக்கும் மகிழ்ச்சியோடும் நிம்மதியோடும் வாழும் நாட்டை நாம் உருவாக்குவோம். இங்கு திரண்டுள்ள மக்களின் பிரதான எதிர்பார்ப்பு அதுதான் என்பதை நாம் அறிவோம்.

மக்களின் அபிலாஷைகளை நிறை வேற்றுவதற்காக நாம் தயக்கமின்றி எமது பொறுப்பை நிறைவேற்றுவோம். நாம் பிரியாதிருப்போம் என்று இந்தத் தைப்பொங்கல் தினத்தில் பிரார்த்தனை செய்வோம்.” – என்றார்.

---

## அநுர மீது மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

றார்கள். பெரும் எதிர்பார்ப்புகளையும் கொண்டிருக்கின்றார்கள். “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பது எமது மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த அடிப் படையில், எமது மக்களின் எதிர்பார்ப்புக ளும் இக்காலப்பகுதியில் ஜனாதிபதியால் நிச்சயம் நிறைவேற்றப்படும் என நான் முழுமையாக நம்புகின்றேன்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில், தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட “பொங்கல் விழா” நேற்று வியாழக்கிழமை வேலணை தெற்கு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயில் (ஐயனார் கோயில்) முன்றலில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தமிழர் பாரம்பரிய முறைப் படி வரவேற்கப்பட்டார். அதனைத் தொடர்ந்துபொங்கல்பானையில்அரிசியிட் டுப் பொங்கலை ஆரம்பித்து வைத்தார்.

வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து வரவேற்புரையாற்றிய ஆளுநர் தெரிவித் ததாவது:-

“இன்றைய நாள் தமிழ் மக்களின் வாழ்வில் மிக முக்கியமான ஒரு நாளாகும். சூரியனுக்கும், சேற்றில் கால் பதிக்கும் உழ வனுக்கும் நன்றி சொல்லும் ஒரு பண்பாட் டுப் பெருவிழாவாக இது அமைகின்றது. இத்தகையதொரு சிறப்பான நாளில், நாட்டின் தலைவர் எம்முடன் இணைந்து தைப்பொங்கலைக் கொண்டாடுவது எமக் கெல்லாம் பெருமையையும் மகிழ்ச் சியையும் அளிக்கின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பே எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது.

கடந்த நவம்பர் மாதம் வீசிய “டித்வா” புயல், எமது மாகாணத்தில் பெரும் அழிவு களை ஏற்படுத்தியிருந்தது. அந்தப் பேரிடர் வேளையில், உடனடி நிவாரணங்களை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், பாதிக் கப்பட்ட விவசாய நிலங்களை மீட்டெ டுத்து, மீண்டும் பயிர்ச்செய்கையை ஊக் குவிப்பதுக்கும் ஜனாதிபதி வழங்கிய உட னடிப் பணிப்புரைகளுக்கு, மாகாண ஆளுநர் என்ற வகையில் நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உண்மையில், சாதாரண மக்களின் வலிகளை நன்கு தெரிந்த ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றமையால் தான், இந்த இழப்பீடுகள் அனைத்தும் இவ்வளவு வேகமாக எமது மக்களை வந்து சேர்ந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாது, எமது மாகாணத்துக்கு அடிக்கடி நேரில் விஜயம் செய்து, இங்குள்ள நிலைமைக ளையும் மக்களின் பிரச்சினைகளையும் அவதானிக்கும் ஒருவராகவும் அவர் இருக்கின்றார்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட எமது மக்களின் வாழ்க்கையைத் துரிதமாக மீளக் கட்டியெழுப்புவது மாத் திரமல்லாது, அவர்கள் முன்னர் இருந்த நிலையை விடச்

07



# தடைகளைத் தகர்த்து இலக்கை அடைவோம்!

## யாழில் ஜனாதிபதி முன்னிலையில் சந்திரசேகர் சூளுரை

"நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தின்போது எத்தடை வரினும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து இலக்கை நோக்கிப் பயணிப்போம்."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"இலங்கையில் டித்வா புயலால் 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். சிலர் காணாமல்போனார்கள். அது மட்டுமல்ல முழு நாடும் ஸ்தம்பிதமடைந்தது.

பொருளாதார ரீதியில் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. இவ்வாறு பேரழிவு ஏற்பட்டிருந்த நிலையிலும் சிலர் அரசியல் நடத்துவதற்கே முற்பட்டனர்.

இலங்கையால் இனி மீண்டெழ முடியாது, இந்த அரசால் அப்பணியைச் செய்ய முடியாது என அவர்கள் கோஷம் எழுப்பினர்.

அரச இயந்திரம்கூட மந்த கதியிலேயே இயங்குகின்றது. எனவே , மீண்டெழுவது சாத்தியமில்லாத விடயம் எனவும் அவர்கள் கருத்துக்களைப் பரப்பினர்.

ஆனால் எமது நாட்டு அரச ஊழியர்களும், மக்களும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முன்வந்தனர்.

முழு நாடும் ஒன்றிணைந்து உதவித் திட்டங்களை முன்னெடுத்தது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் நேசக்கரம் நீட்டினார்கள். உலக நாடுகளும் துணை நின்றன.

தை பிறந்தாள் வழி பிறக்கும் என்பார்கள், அதற்காகவே நாம் பிரார்த்திக்கின்றோம். ஆனால், தை பிறந்தாலும்



மக்களுக்கு வழி பிறக்கக்கூடாது என சில அரசியல்வாதிகள் சிந்திக்கின்றனர்.

எது எப்படி இருந்தாலும் தை பிறப்பதையும், இந்நாட்டுக்கு வழி பிறப்பதையும் அந்த அரசியல்வாதிகளால் தடுத்து நிறுத்த முடியாது. அவர்களின் சூழ்சிகள் எல்லாம் தோற்கடிக்கப்படும்.

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஒன்றிணையும் பட்சத்திலேயே மீட்சி என்பது சாத்தியம். பிரிந்து நின்று எதையும் சாதிக்க முடியாது." – என்றார்.



### அநுர மீது மக்கள்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிறப்பானதொரு நிலையை அடைவதை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கில், மாகாண நிர்வாகம் முன்னெடுக்கும் அத்தனை நடவடிக்கைகளுக்கும் அரசின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்து வருகின்றது.

எமது மக்களின் துயர் துடைக்கவும், அவர்களின் நம்பிக்கையை மெய்ப்பிக்கவும், எம்மோடு இணைந்து பண்டிகையைக் கொண்டாடவும் வருகை தந்துள்ள ஜனாதிபதியையும், ஏனைய விருந்தினர்களையும் வடக்கு மாகாண சபை சார்பில் அன்போடு வரவேற்கின்றேன்." – என்றார்.

இந்நிகழ்வில், அண்மையில் ஏற்பட்ட டித்வா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெ.றஜீவன், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சருமான இ.சந்திரசேகர் ஆகியோரும் உரையாற்றினர். அதன் பின்னர் ஜனாதிபதி சிறப்புரையாற்றினார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சர்ச்சைக்குரிய தரநிலை உயர்வு

இலங்கையில் யுத்த காலத்தில் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக மோசமாக இழைக்கப்பட்ட கொடூரக் குற்றங்கள் தொடர்பில் எந்த சட்ட நடவடிக்கைகளும் உரிய முறையில் எடுக்கப் படவேயில்லை. படைத்தரப்பும் பொலிஸும் இந்தக் கொடூரங்களைப் புரிந்தன என்று கருதப்படும் நிலையில், ஊடக தரப்புக்கு எதிரான இத்தகைய எந்தக் கொடூரங்கள் தொடர்பிலும் பொறுப்புக் கூறல் நடைமுறைப் படுத்தப்படவில்லை. நீதி நிலை நாட்டப்படவில்லை. உண்மை கண்டறியப்படவில்லை. குற்றம் இழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேயில்லை.

ஊடகத் தரப்புகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்ட ரீதியான நடவடிக்கைகள் என்ற சாரப்பட பௌத்த - சிங்கள பேரினவாத அரசுத் தலைமைகளினால் உத்தியோகப் பற்றற்ற முறையில் அங்கீகரிக்கப்பட்டிருப்பது இதற்குக் காரணம் என்பது துலாம்பரமானது.

இந்தச் சமயத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடா கடத்தப்பட்டு காணாமலக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிக்கு இலங்கை ஜனாதிபதி பதவி உயர்வு அளித்தமைக்கு ஆர்வலர்களும் ஊடக சுதந்திரக் குழுவினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு இது தொடர்பில் எழுதிய கடிதத்தில், பத்திரிகையாளரின் மனைவி சந்தியா எக்னெலிகொடா, சந்தேக நபரான லெப்டினன்ட் கேணல் எரந்த ரதீஷ் பீரிஸ் பிரிகேடியர் பதவிக்கு உயர்த்தப்பட்டார் என ஊடக அறிக்கைகள் மூலம் தாம் அறிந்ததார் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பதவியுயர்வு வழங்கலுக்கு அவர் கடும் வருத்தத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளார். தனது கணவர் 2010 ஜனவரியில் காணாமல் போனமை தொடர்பக நடந்து வரும் குற்றவியல் வழக்கில் பீரிஸ் ஒரு பிரதிவாதி என்று அவர் கூறினார்.

இந்த வழக்குத் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட பல இராணுவப் புலனாய்வு அதிகாரிகளில் லெப்டினன்ட் கேணல் பீரிஸ் ஒருவர். கடிதத்தின்படி, சட்டமா அதிபர் 2019 ஆம் ஆண்டில் அவருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு உட்பட 17 குற்றச் சாட்டுகளைத் தாக்கல் செய்தார். சி.ஐ.டி. விசாரணை அவர் கடத்தலில் நேரடியாக ஈடுபட்டார் என அடையாளம் கண்டுள்ளதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கடுமையான குற்றச் சாட்டுகளை எதிர்கொள்ளும் ஓர் அதிகாரிக்கு பதவி உயர்வு அளிப்பது நீதித்துறை செயல்முறையை சமரசம் செய்யும் என்று சந்தியா எக்னெலி கொடா எச்சரித்தார்.

“கடுமையான குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட ஓர் அதிகாரிக்கு இவ்வளவு மூத்த பதவியை வழங்குவதன் மூலம், சாட்சிகள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கும், விசாரணை அதிகாரிகளை ஊக்கப்படுத்துவதற்கும், நீதித்துறை செயல்முறையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்கும் கடுமையான ஆபத்து உள்ளது” என்று அவர் எழுதியுள்ளார்.

எக்னெலிகொடா வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஓய்வுபெற்ற மூத்த அதிகாரி ஒருவர், ஒரு முக்கிய சாட்சியை அச்சுறுத்தினார் எனக் கூறப்படும் மற்றொரு வழக்கையும் அவர் குறிப்பிட்டார்.

சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பான ஆதரவாளர்கள் இந்தப் பதவி உயர்வு வழங்கலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது, வலிந்து காணாமல் போகச் செய்தமைக்கான விவகாரங்களில் பொறுப்புக்கூறலை நிலை நாட்டுவது தொடர்பில் பொது மக்களின் நம்பிக்கையைச் சேதப்படுத்துவதாகவும், சட்டத்தின் ஆட்சியின் மீதான நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். அது முற்றிலும் உண்மை.

# 2026 கல்வி ஆண்டிற்கான பாடசாலை நடவடிக்கைகள்

## கல்வி அமைச்சினால் விசேட அறிவித்தல்

நாடளாவிய ரீதியிலுள்ள சகல அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் 2026 கல்வி ஆண்டிற்கான பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் தொடர்பான விசேட அறிவித்தல் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளைப் பின்வருமாறு முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2025 ஆம் ஆண்டில் தரம் 1 இற்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைவான பாடத்திட்டத்தின் முறைசார் கற்கை நடவடிக்கைகள், ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.


தரம் 6 இற்காக அறிமுகப்படுத்தப்படவிருந்த புதிய பாடத்திட்ட அமுலாக்கமானது 2027 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்படுகின்றது. 2026ஆம் ஆண்டில் தரம் 6 முதல் தரம் 13 வரையிலான வகுப்புகளுக்கு, நாளாந்தப் பாடவேளைகளின் எண்ணிக்கை 08 ஆக மட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் ஒரு பாடவேளைக்கான கால அளவு 40 நிமிடங்களாக நிர்ணயிக்கப்படல் வேண்டும். இதற்கமைய கடந்த வருடங்களில் பின்பற்றப்பட்ட முறைமைக்கு அமைவாகவே கால அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

தரம் 6 இற்காக கடந்த வருடங்களில் நடைமுறையில் இருந்த பாடத்திட்டமே 2026ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். தரம் 6 கல்வி நடவடிக்கைகளுக்கு, கடந்த கல்வியாண்டில் மாணவர்கள் பயன்படுத்திய பாடநூல்களையே பிரதானமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

கடந்த வருடம் பயன்படுத்தப்பட்ட பாடநூல்களை மாணவர்களிடமிருந்து மீளப்பெற்று, அவற்றை மீண்டும் தரம் 6 மாணவர்களுக்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் அனைத்து அதிபர்களுக்கும் வழங்கப்படும். அத்தியாவசியத் தேவைகளுக்கு ஏற்ப, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் புதிய பாடநூல்களை விரைவாக அச்சிட்டு விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2026 ஆம் ஆண்டில் தரம் 6 இற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய பாடநூல்களுக்குரிய மென் பிரதிகள், கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். புதிய சீர்திருத்தங்களுக்குரிய மொடியூல் தொடர்பான முன்னோடித் திட்டமொன்றை, இவ்வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட சில மாகாணங்களில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

தரம் 6 இற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள மொடியூல் மீண்டும் மீளாய்வு செய்து எதிர்வரும் ஆண்டில் பொருத்தமான வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைவான ஆசிரியர் குழாமைத் தயார்ப்படுத்தும் பயிற்சி நடவடிக்கைகள் 2026 ஆம் ஆண்டு முழுவதும் தொடரச்சியாக முன்னெடுக்கப்படும்



අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

+9411 2784161
+9411 2784869

මාධ්‍ය නිවේදනය | ஊடக வெளியீடு | MEDIA RELEASE

MEDIA UNIT

2025-01-14

**2026 ஆம் கல்வி ஆண்டிற்கான பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் தொடர்பான விசேட அறிவித்தல்**

2026 ஜனவரி 13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, 2026 ஜனவரி 21 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளைப் பின்வருமாறு முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- 2026 ஆம் ஆண்டில் தரம் 1 இற்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைவான பாடத்திட்டத்தின் முறைசார் கற்கை நடவடிக்கைகள், ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க 2026 ஜனவரி 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.
- தரம் 6 இற்காக அறிமுகப்படுத்தப்படவிருந்த புதிய பாடத்திட்ட அமுலாக்கமானது 2027 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்படுகின்றது.
- கால அட்டவணை (தரம் 6 - 13): 2026 ஆம் ஆண்டில் தரம் 6 முதல் தரம் 13 வரையிலான வகுப்புகளுக்கு, நாளாந்தப் பாடவேளைகளின் எண்ணிக்கை எட்டாக (08) மட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், ஒரு பாடவேளைக்கான கால அளவு 40 நிமிடங்களாக நிர்ணயிக்கப்படல் வேண்டும். இதற்கமைய, கடந்த வருடங்களில் பின்பற்றப்பட்ட முறைமைக்கு அமைவாகவே கால அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும்.
- தரம் 6 கல்வி நடவடிக்கைகளுக்கு, கடந்த கல்வியாண்டில் மாணவர்கள் பயன்படுத்திய பாடநூல்களையே பிரதானமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
- கடந்த வருடம் பயன்படுத்தப்பட்ட பாடநூல்களை மாணவர்களிடமிருந்து மீளப்பெற்று, அவற்றை மீண்டும் தரம் 6 மாணவர்களுக்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் அனைத்து அதிபர்களுக்கும் வழங்கப்படும்.
- அத்தியாவசியத் தேவைகளுக்கு ஏற்ப, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் புதிய பாடநூல்களை விரைவாக அச்சிட்டு விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- 2026 ஆம் ஆண்டில் தரம் 6 இற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய பாடநூல்களுக்குரிய மென் பிரதிகள், கல்வி அமைச்சின் 'e-thaksalawa' (e-தக்சலாவ) இணையத்தளத்தில் வெளியிடப்படும்.
- புதிய சீர்திருத்தங்களுக்குரிய மொடியூல் (Modules) தொடர்பான முன்னோடித் திட்டமொன்றை, இவ்வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட சில மாகாணங்களில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.
- தரம் 6 இற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள மொடியூல் (Modules) மீண்டும் மீளாய்வு செய்து, எதிர்வரும் ஆண்டில் பொருத்தமான வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைவான ஆசிரியர் குழாமைத் தயார்ப்படுத்தும் பயிற்சி நடவடிக்கைகள் 2026 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.
- புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மனிதவள மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, நிர்வாகச் சீர்திருத்தங்கள், மதிப்பீட்டுச் செயல்முறை மேம்பாடு மற்றும் பரந்தளவிலான பொது மக்கள் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆகியன 2026 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மனிதவள மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, நிர்வாகச் சீர்திருத்தங்கள், மதிப்பீட்டுச் செயல்முறை மேம்பாடு மற்றும் பரந்தளவிலான பொது மக்கள் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆகியன 2026 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள எண்ணக்கருப் பத்திரம், கலைத்திட்ட சட்டகம் மற்றும் அனைத்துத் தொகுதிகளும், திறந்த மற்றும் விரிவானதொரு பொதுக் கலந்துரையாடலுக்காக பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# கல்வி சீர்திருத்தங்களின் நம்பகத்தன்மையை பாதுகாக்க அரசுக்கு புத்திஜீவிகள் கோரிக்கை

வெறுப்பு பேச்சு மற்றும் இழிவான கருத்துப் பரப்புரைகளை எதிர்கொண்டிருக்கும் சூழலில் நடைபெற்று வரும் கல்வி சீர்திருத்தங்களின் நம்பகத்தன்மையை பாதுகாக்க கோரி அரசாங்கத்துக்கான அழைப்பு ஒன்றை நாட்டின் புத்திஜீவிகள் குழு ஒன்று வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:–

நாட்டின் எதிர்காலத்திற்கு தற்போதைய கல்வி அமைப்பில் சீர்திருத்தங்கள் அவசியம் என நம்பும் நாங்கள், அரசாங்கம் செயல்படுத்தி வரும் கல்வி சீர்திருத்தங்களையும், அவற்றைச் சுற்றி உருவாகும் பொது விவாதங்களையும் நெருக்கமாகக் கண்காணித்து வருகிறோம்.

சில எதிர்க்கட்சிக் குழுக்கள் மற்றும் தனிநபர்கள், பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை இலக்காகக் கொண்டு மேற்கொண்டுவரும் வெறுப்பு பேச்சுக்கள், இழிவான மற்றும் ஒழுக்கமற்ற தாக்குதல்கள், நாகரிகசமூகத்தின் ஒழுக்கமதிப்புகளுக்கே அவமானமாகும். இத்தகைய தாக்குதல்கள், முன்னேற்றகரமான பெண்களின் அரசியல் தலைமைத்துவத்தை ஏளனப்படுத்தும் பெண்விரோத மனப்பாங்குகளை இயல்பாக்குவதோடு மட்டுமல்லாமல், உடனடியாகத் தேவையான கல்வி சீர்திருத்தங்கள் குறித்த பயன்மிக்க பங்கேற்புகள், முதிர்ச்சியான மற்றும் அர்த்தமுள்ள விவாதங்கள் போன்றவற்றுக்கு தேவையான வெளியையும் தடுக்கின்றன.

மக்களின் பெரும்பான்மையான ஆதரவுடன் தற்போது அரசுக் கொள்கையாக மாறியுள்ள தேசிய மக்கள் சக்தியின் கல்விக் கொள்கையில் விளக்கப்பட்டுள்ளபடி, முன்னோக்கு பார்வையுள்ள கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி அமைப்பு ஒன்று எமது நாட்டிற்கு அவசியம் என்பதில் பரவலான ஒப்புதல் நிலவுகிறது. புதிய கல்வி அமைப்பு கல்வியை வெறும் ஒரு வணிகப் பொருளாக அல்லாமல், தலைமைத்துவம், ஒழுக்க விழுமியங்கள், நேர்மை, சமூக நகர்வு, சமூகப் பங்கேற்பு, பல்வேறு சமூகக் குழுக்களின் உள்வாங்கல், மற்றும் செயல்திறன் வாய்ந்த தொடர்பாடல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட முன்னேற்றமான அணுகுமுறையின் மூலம், மேலும் முன்னேற்றமடைகிற மற்றும் நாகரிகமான குடிமக்களை உருவாக்கும் ஒரு செயல்முறையாகக் காண வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் கல்விக் கொள்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்தச் சீர்திருத்தங்கள் பின்வரும் முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம்:–

- சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் கல்வியை சமமாக அணுகும் வாய்ப்பை உறுதிப்படுத்துவது.
- சிறப்புசலுகை பெற்ற குழுக்களுக்கும் பின்தங்கிய குழுக்களுக்கும் இடையிலான தீவிரமான இடைவெளிகளை நீக்குவது.
- கல்விக்கான அரசின் பொறுப்பை உறுதிப்படுத்துவது.
- பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக தேவையான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், நடைமுறைகள் மற்றும் விழுமியங்களை கற்றலாளர்களுக்கு வழங்குவது.
- சமூகத்தின் கேள்வி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வகையில் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்குப் பங்களிப்பது.
- அனைத்து தேசிய இனங்களின் கலாசார பல்வகைமையையும் உள்வாங்கி இணைத்துக்கொள்வது.
- எந்தவொரு சமூகக் குழுவின் மீதும் பாகுபாடுகளைத் தவிர்ப்பது.
- சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நலனையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவது.
- உலகளாவிய மற்றும் உள்ளூர் தேவைகளுக்கு திறம்பட பதிலளிப்பது.

மேலும், இச்சீர்திருத்தச் செயல்முறை தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்கான இலவசக் கல்விக்கான உரிமையை விரிவுபடுத்தி பாதுகாப்பதாக அமைய வேண்டும்.

இத்தகைய பரந்து விரிந்த, தாக்கம் உண்டாக்கக்கூடிய ஃ செல்வாக்கு செலுத்தக்கூடிய, நேர்மறையான சீர்திருத்த முன்னெடுப்பானது கல்வியமைப்புக்குட்பட்ட அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் உயர் மட்ட பொறுப்பினைத் தேடும் ஒரு முக்கியமான பணியாகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. எனினும், இந்த பொறுப்பில் நியமிக்கப்பட்ட முக்கிய நிறுவனங்களில்

தொடர்ச்சி ▼



# கல்வி சீர்திருத்தங்களின் நம்பகத்தன்மையை பாதுகாக்க அரசுக்கு புத்திஜீவிகள் கோரிக்கை

தொடர்ச்சி ▲

ஒன்றான தேசிய கல்வி நிறுவகம் (NIE) நடந்துகொண்ட முறைமை, இந்த மாற்றத்தின் நம்பகத்தன்மையைப் பற்றிய தீவிரமான கரிசனங்களை எழுப்பியுள்ளது.

பாடப்புத்தக தொகுப்புச் செயல்முறையில் ஏற்பட்ட பிழைகள் மற்றும் சிக்கலுக்குள்ளான பாடப்புத்தக உள்ளடக்கத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் கவனமாகவும், தீவிரமாகவும் பரிசீலனை செய்யப்பட வேண்டும். எனினும், தேசிய கல்வி நிறுவனத்தின் பொறுப்பிலுள்ள இடைவெளிகள் மற்றும் தாமதங்கள் குறிப்பிடத்தக்களவு கரிசனங்களை எழுப்புகின்றன. இந்த சூழலில், இந்த முக்கியமான சீர்திருத்த செயல்முறையில் பொது நம்பிக்கையை மீட்டெடுக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்:

1. தற்போதைய செயல்முறைக்குப் பொறுப்புடைய தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளிலிருந்து வேறுபட்ட ஒரு சுயாதீன அமைப்பின் மூலம் தரம் 1 முதல் 6 வரையிலான புதிய பாடப்புத்தகங்களின் அச்சுப் பிழைகள் மற்றும் உள்ளடக்கத்தை பரிசீலனை செய்வதுடன் அதேவேளை, கல்வி அமைப்பின் மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டிய அனைத்து நிறுவனங்களுக்கும் அரசாங்க அமைப்புகளுக்கும் இடையேயான பரஸ்பர புரிந்துணர்வை சிறந்த ஒருங்கிணைப்பின் ஊடாக பேணுவது.

2. பள்ளிக் கல்வி உள்ளடக்கத்தை கண்காணிப்பதில் தேசிய கல்வி நிறுவகத்தின் பங்கு மற்றும் செயல்திறனை சிறப்பாக நியமிக்கப்பட்ட குழு, ஆணைக்குழு அல்லது அமைப்பின் மூலம் விரிவான முறையில் மீளாய்வு செய்து, தேசிய கல்வி நிறுவகத்தை மறுசீரமைப்பது.

3. இக்காலப்பகுதியில், தேசிய மக்கள் சக்தியின் கல்விக் கொள்கை விதிகளின் அடிப்படையில், ஆசிரியர் சங்கங்கள் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களுடன் கல்வி சீர்திருத்தங்களைப் பற்றி முறையான மற்றும் உள்வாங்கலுடன் கூடியதுமான (inclusive) உரையாடல்களை நடாத்தி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொது பொறுப்புத்தன்மையை உறுதிப்படுத்துவது.

4. கல்விக்கான பொதுச் செலவீனம் மொத்த தேசிய வருமானத்தின் 6 வீத இலக்கை எட்டுவதை உறுதிசெய்ய, தேசிய பாதீட்டில் பெரிய பகுதியை ஒதுக்குவது.

அதே சமயத்தில், பால்நிலை மற்றும் அடையாளத்தை மனிதமற்ற தாக்கி, கீழ்த்தள்ளி, அவமதிக்கும் பிரசாரங்களை பின்பற்றாமல், அரசாங்கமானது நாகரிகமடைந்த சமூகங்கள் இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் முறையில் செயல்பட்டு, நடப்பது அவசியமாகும். சில குழுக்கள் பரப்பும் இழிவான தெளிவற்ற மற்றும் வெறுப்பூட்டும் பரப்புரைகள், அனைத்து சமூக அடையாளங்களையும் மதிக்கும் முன்னேற்றமான குடிமக்களை உருவாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கம் ஆகும் எனும் கல்வி சீர்திருத்தத்தின் அடிப்படை நோக்கத்திற்கு மாறாக செயற்படுகின்றன.

இந்த கல்விமாற்றத்திற்கான நோக்கம் , கல்விசார் சமூகம் மற்றும் தொழிற்துறை சமூகத்தின் பெரும்பாலான ஆதரவை மட்டுமின்றி, பரந்துபட்ட அளவில் பொதுமக்களின் வலுவான ஆதரவையும் தொடர்ந்து பெற்றுவருகிறது என்பதை அரசாங்கத்திற்கு நாம் நினைவூட்டுகிறோம். இந்த ஆதரவானது ஒரு சிறு குழுவின் வெறுப்பூட்டும், ஒழுக்கமற்ற, அறமற்ற மற்றும் நாகரிகமற்ற நடத்தையின் காரணமாக பாதிக்கப்படாமல் மேலே குறிப்பிட்ட கொள்கைகளைக் கொண்டு உருவாக்கப்படும் கல்வி அமைப்பிற்காக தொடர்ந்தும் நிலைத்திருக்கும் என்பதையும் நினைவூட்டுகிறோம். – என்று உள்ளது.

இந்த அறிக்கையில் பேராசிரியர் ஜெயதேவ உய்யங்கொட, பேராசிரியர் ஜகத் வீரசிங்க, பேராசிரியர் அன்பகன் ஐயாத்துரை, பேராசிரியர் உத்பல ஜயவர்த்தன, பேராசிரியர் றொஹான் பெர்னாண்டோ, பேராசிரியர் பிரின்ஸ் ஜெயதேவன், கலாநிதி எஸ்.அறிவழகன், பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி, கலாநிதி என்.வரதன், சந்துன் துடுகல (சட்டம் மற்றும் சமூக நிதியம்), கலாநிதி மரியதாஸ் அல்பிரட், கலாநிதி அத்துல சிறி சமரகோன், சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிநாதன் விமல், கலாநிதி டிலீபா விதாரண, கலாநிதி எஸ்.செல்வகணேஷ், வங்கீஸ சுமணசேகர (கொழும்பு தத்துவவியல் கல்லூரி), பொறியியலாளர் எம்.சூரியசேகரம், சட்டத்தரணி விதுர முனசிங்க, கலாநிதி அமாலி வெதெதர, சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனக செல்வராஸ், கலாநிதி தயாகதர வரதாஸ், சமூக சேவையாளர் சஞ்சீவ குணதிலக, கலாநிதி விசாகேச சந்திரசேகரம், சிரேஷ்ட விரிவுரையாளர் சிதுமின ரத்னமாலா, கலாநிதி விவிமாரி வண்டர் பூரட்டன், சமூக சேவையாளர் ஷிரீன் சரூர், ஆய்வாளர் ஹிரியந்த தேவசிறி ஆகிய 27 பேர் ஒப்பமிட்டுள்ளனர்.

# திருமலை புத்தர் சிலை விவகார பிக்கு விளக்கமறியலில் உண்ணாவிரதமாம்!





திருகோணமலை சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள வனவாசி பலாங்கொட கஸ்ஸப தேரர், நேற்றுக் காலை முதல் உணவு உள்கொள்ள மறுத்து சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கின்றார் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பலாங்கொட கஸ்ஸப தேரர் காலை மற்றும் மதிய உணவு உட்கொள்ள மறுத்து இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார் என நேற்றிரவு அறியப்படுகிறது.

நவம்பர் 16 ஆம் திகதி திருகோணமலை கடற்கரையில் கடலோரப் பாதுகாப்புக் கட்டளை சட்டத்தை மீறி சட்டவிரோதமான முறையில் புத்தர் சிலைக்கான கொட்டகை ஒன்றை அமைத்தனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு பிக்குகள் உட்பட ஒன்பது பேர் நேற்று முன்தினம் முதல் வரும் திங்கட்கிழமை 19 ஆம் திகதி வரை திருகோணமல. நீதிவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களில்பலாங்கொட கஸ்ஸப தேரர் மட்டுமே இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார், அதே நேரத்தில் மற்ற பிக்குகள் வழக்கம் போல் உணவு பெற முன்னிலையாகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வணக்கத்துக்குரிய பலாங்கொட கஸ்ஸப தேரரின் இந்த உண்ணாவிரதம் குறித்து திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலை திருகோணமலை துறைமுக பொலிஸாருக்கும் தகவல் அளித்துள்ளது.



# காத்தான்குடி வாவியில் மீண்டும் இறந்த நிலையில் பெரிய முதலை

காத்தான்குடி வாவியில், சுமார் 12 அடி நீளமான இராட்சத முதலையொன்று இறந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு கரை ஒதுங்கியுள்ளது.

இந்த வாவியில் கடந்த 15 நாளகளுக்குள் இராட்சத் முதலை சடலமாக மீட்கப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும் எனத் தெரிவிக்கச்ப்படுகின்றது.

கடந்த மாத இறுதியில் இதே பகுதியில் மற்றொரு இராட்சத முதலை இறந்த நிலையில் கரை ஒதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாவியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாகப் பொதுமக்கள் வனஜீவராசிகள் திணைக்களத்திற்குத் தொடர்ந்து முறைப்பாடுகளை அளித்து வந்த நிலையிலேயே, தற்போது இரண்டாவது முதலையும் இவ்வாறு இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 12 அடி நீளம் கொண்ட இந்த முதலையைப் பார்வையிடுவதற்காகப் பொதுமக்கள் பெருமளவில் அங்கு கூடி வருகின்றனர்.





# மன்னாரில் இந்து, கத்தோலிக்க ஆலய முன்றில்களில் நேற்று சிறப்பாக நடந்தேறிய பொங்கல் திருவிழாக்கள்

**(வாஸ் கூஞ்ஞ)**

தமிழர் திருநாளாம் தைல்பொங்கல் விழாவை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் தமிழர்களான இந்துக்கள் மற்றும் கத்தோலிக்க மக்கள் கோவில்கள் – ஆலயங்களா. – வீடுகள் மற்றும் பொது இடங்களிலும் சூரியனுக்கு பொங்கல் செய்து பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடினர்.

மன்னார் பகுதியில் கத்தோலிக்க மக்கள் பல ஆலயங்களில் ஆலய மேய்ப்பு பணியாளர்கள் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் விவசாய அமைப்புக்கள், பக்தி சபையினரின் ஆகியோர் ஒன்றிணைந்து ஆலயமுன்றில்களில் பொங்கல் பொங்கியமையுடன் காலையில் பங்கு தந்தையினரின் தலைமையில் விசேட திருப்பலிகளும் இடம்பெற்றன.

இவ்வாறு இந்து மக்களும் தங்கள் கோவில்களில் நடைபெற்ற விசேட வழிபாடுகளிலும் கலந்து கொண்டமையுடன் கோவில் முன்றில்களில் சூரியனுக்கு பொங்கல் செய்து வழிபட்டனர்.

அத்துடன் தமிழர்களின் பெரும்பாலானோரின் வீடுகளிலும் பொங்கல்கல் இடம்பெற்றதையும் நோக்கக்கூடியதாக இருந்தது.

சில இடங்களில் கிராம அமைப்புக்கள் தங்கள் தங்கள் பகுதிகளில் பொது இடங்களில் பொங்கல் செய்து வழி போக்கர்களுக்கு பொங்கலை பரிமாறி மகிழ்வு கொண்டனர்.

வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் அப்பகுதி விவசாய அமைப்புக்கள் பங்கு சபையினர் மற்றும் கத்தோலிக்க இளைஞர் ஒள்றியம் இணைந்து பொங்கல் விழாவை பங்கு தந்தை அருட்பணி லக்கோன் அடிகளாரின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடத்தினர். அத்துடன் அப்பகுதியிலுள்ள சிரேஷ்ட விவசாயிகளுக்கு பொன்னாடை போர்த்தி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்ட நிகழ்வும் இடம்பெற்றது.











# சுதந்திரமான தொல்லியல் ஆய்வின் மூலம் தமிழர்களின் வரலாற்றை மீட்டெடுப்போம்!

## தமிழர் தாயக காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் உறுதி









**(கி.வசந்தன்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சுதந்திரமான தொல்லியல் ஆய்வின் மூலம் தமிழர் வரலாற்றை மீட்டெடுக்க வேண்டும் என தமிழர் தாயகக் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

தைப்பொங்கல் தினமான நேற்று வவுனியாவில் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

இந்த அறுவடைத் திருவிழா நமது மக்களுக்கு வலிமையையும், ஒற்றுமையையும், கண்ணியத்தையும், நம்பிக்கையையும் கொண்டு வரட்டும். மேலும், உண்மை, நீதி, தமிழ் வரலாறு மற்றும் நாகரிகத்தைப் பாதுகாப்பதற்கான நமது கூட்டு உறுதிப்பாட்டைப் புதுப்பிக்கட்டும்.

தைப்பொங்கல் நாளில், காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்களாகிய நாங்கள், வவுனியாவில் உள்ள ஏ-9 வீதியில் 3,251 ஆவது நாள்களுக்கும் மேலாக எமது தொடர்ச்சியான சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்கிறோம்.

தியாகம், வலி மற்றும் அசைக்க முடியாத உறுதிப்பாடு நிறைந்த இந்த இடத்திலிருந்து, காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள் குறித்த உண்மைக்கான எங்கள் கோரிக்கையை மட்டுமல்லாமல், தமிழ் வரலாறு, கண்ணியம் மற்றும் இறையாண்மையை மீட்டெடுப்பதற்கான ஓர் அழைப்பையும் நாங்கள் முன்வைக்கிறோம்.

தமிழ் அறிஞர்களின் தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு சுதந்திரமான தொல்லியல் திணைக்களத்தை நிறுவ வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். இது, தமிழ் சைவத்தின் மற்றும் தமிழ் பௌத்தத்தின் வரலாற்று உண்மைகளைக் கண்டறிந்து வெளிக்கொணரவும், தென்னிந்தியா மற்றும் வரலாற்று ரீதியாக சிலோன் என்று அழைக்கப்பட்ட தீவு உட்பட தமிழ்நாடெங்கிலும் செழித்தோங்கிய பண்டைய தமிழ் நாகரிகத்தை ஆவணப்படுத்தவும் வேண்டும்.

தமிழ் நாகரிகம் சமீபத்தில் தோன்றியதல்ல. அது தற்செயலாகவோ அல்லது குடியேற்றத்தாலோ வந்ததல்ல. அது சிங்கள மொழி, சிங்கள அடையாளம் அல்லது பிற்காலத்தில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட மகாவம்சக் கதைக்குப் பிறகு தோன்றியதல்ல. தமிழர்கள் இங்கு நீண்ட காலத்திற்கு முன்பே இருந்தார்கள்.

பல தசாப்தங்களாக, சிங்கள இனவாதக் கதைகள் தமிழர்களை எங்கள் சொந்த மூதாதையர் நிலத்தில் குடியேறிகள், சட்டவிரோதமாக வந்தவர்கள் அல்லது வெளியாள்கள் என்று தவறாகச் சித்திரித்து வருகின்றன. ஒரு பொய் பலமுறை மீண்டும் மீண்டும் கூறப்படும் போது, அது உண்மை போல் ஒலிக்கத் தொடங்குகிறது. அதுதான் தமிழ் மக்களுக்குச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொய்யை நாங்கள் முழுமையாக நிராகரிக்கிறோம்.

இந்த நிலம் சிங்கள இனத்திற்கு முன்பும், சிங்கள மொழிக்கு முன்பும், மகாவம்சம் எழுதப்படுவதற்கு முன்பும் தமிழர்களுக்குச் சொந்தமானது. இந்த வரலாற்று உண்மை தமிழ் பிள்ளைகளுக்கும், தமிழ் அரசியல்வாதிகளுக்கும், சாதாரண தமிழ் பொதுமக்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டும். இது சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். தமிழர்கள் நமது கதையை உரக்க, தெளிவாக, மீண்டும் மீண்டும் சொல்லும் போது, சிங்களத் தலைவர்கள் தங்கள் கதையைத் தொடர்ச்சியாகக் கேட்கச் செய்ததைப் போலவே, ஐரோப்பிய ஒன்றிய மற்றும் அமெரிக்க இராஜதந்திரிகளும் செவிசாய்ப்பார்கள்.

நீண்டகாலப் போராட்டத்திற்கும் தாய்மார்களின் தியாகத்திற்கும் சாட்சியாக விளங்கும் இந்த இடத்திலிருந்து, காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளைப் பற்றிய உண்மையை வெளிக்கொணரவும், தமிழ் மக்கள் மீது தொடரும் அழிவைத் தடுத்து நிறுத்தவும், எங்கள் மூதாதையர் தாயகத்தில் தமிழர்களின் இறைமையை மீட்டெடுக்க ஆதரவளிக்கவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் நாங்கள் மீண்டும் ஒரு முறை வேண்டுகோள் விடுக்கிறோம். – என்றனர்.

# சத்தியலிங்கம் எம்.பி. பச்சைத் துரோகியாம்! கட்சிக்கும் துரோகம் இழைத்து விட்டாராம்!!

## கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சிவமோகன் பதறியடிக்கின்றார்

(கி.வசந்தன்)

சத்தியலிங்கம் பச்சைத் துரோகி. மாவையால் பதில் செயலாளராக கொண்டு வரப்பட்டவர். ஆனால் அவருக்கும், கட்சிக்கும் துரோகம் செய்து விட்டார் என தமிழரசுக் கட்சியின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியிலிருந்து ஒரு வருடத்துக்கு முன்னரே இடைநிறுத்தப்பட்டு விட்டவருமான சி.சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுக்குழுவில் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கான தேர்தலை நடத்த வேண்டாம் என இரா.சம்பந்தனால் சுமந்திரன் மற்றும் சிறிதரன் ஆகிய இருவருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மத்திய குழுவில் அந்த தகவல் பரிமாறப்பட்டு, இருவரும் நேரடியாக சம்பந்தன் ஐயாவிடம் சென்று கதைக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. சுமந்திரன் மற்றும் சிறிதரன் ஆகியோர் சென்று கதைத்தார்கள். இருவரும் என்னிடமும் கதைத்தார்கள். நானும் தேர்தல் வேண்டாம், நீங்கள் இருவரில் ஒருவர் இரண்டு வருடம் அல்லது ஒரு வருடம் பொறுப்பு எடுங்கள். அடுத்த வருடத்தை மற்றவருக்கு கொடுங்கள் எனக் கூறினேன். அதை வேண்டும் என்றால் குலுக்கல் அடிப்படையில் தீர்மானித்துக் கொள்ளுங்கள் எனக் கூறினேன்.

போட்டி போட்டால் கட்சி உடைந்து சின்னாபின்னமாக போகும் என எல்லோரும் சொன்னார்கள். எல்லோரும் யாரோ ஒருவருக்கு தான் வாக்கு போட முடியும். அதற்காக நான் இவருக்கு போட்டேன், அவருக்கு போட்டேன் என சொல்லித் திரிய வேண்டிய அவசியமில்லை. அது இரகசிய வாக்கெடுப்பு. அதனால் யார் யாருக்கு போட்டார்கள் என்பது பிரச்சனை யில்லை.




சம்பந்தன் ஐயா தம்மைத் தலைவராக பிரகடனப்படுத்த வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அவ்வாறு பிரகடனப்படுத்த சம்பந்தன் விரும்பவில்லை. அதற்காக வயது முதிர்ந்த நேரத்தில் கூட அரசாங்க வீட்டில் இருந்தது தவறு எனச் சொல்லி அந்த வீட்டை அரசாங்கத்திடம் கொடுத்து விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என வேலை செய்தார்கள். எனவே, தங்களது சுயநலங்கள் பலிக்கவில்லை எனில் தலைவர்களையே கவிழ்ப்பவர்கள் இவர்கள்.

மாவை சேனாதிராஜா ஐயாவால் பதில் செயலாளராக கொண்டு வரப்பட்டவர் தான் சத்தியலிங்கம். பதில் செயலாளர் முடிவெடுத்து கடிதம் எழுதுவதாக இருந்தால் தலைவரது ஆலோசனை பெறப்பட வேண்டும். அதே தலைவருக்கு கடிதம் எழுத முன்பு கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும். ஆனால் சத்தியலிங்கம் அப்படி செய்யவில்லை. பச்சைத் துரோகி. அவரால் கொண்டு வரப்பட்டவர் அவருக்கு மட்டுமல்ல, அந்தக் கட்சிக்கே துரோகம செய்துள்ளார். அவரை செயலாளராக கொண்டு வந்ததால்தான் கட்சி கேவலமான நிலைக்கு சென்றது.

மாவை ஐயாவை தலைவர் பதவியில் இருந்து நிறுத்துவதாக இருந்தால் அதை கலந்துரையாடி செய்திருக்க வேண்டும். அப்படி முடிவெடுப்பதாக இருந்தால் தனக்கு தேசியப் பட்டியல் கிடைப்பதற்கு முன் அவரை நிறுத்தியிருக்க வேண்டும். தேசியப் பட்டியல் கைக்கு வந்து முடிய எல்லாவற்றையும் எடுத்து பொக்கற்றுகுள் போட்டு விட்டு தான் நீங்கள் வைத்தியர்களுக்கும் மிட் வைப்புக்கும் கடிதம் எழுதுவது போல் எழுதுகிறீர்கள். இது என்ன நடைமுறை? கட்சி நடைமுறைக்கு முரணானது. நீங்கள் வேறு ஒரு நிகழ்ச்சி நிரலில் போய் கொண்டு இருக்கிறீர்கள்.

பதில் பொதுச் செயலாளர் தொடர்ந்தும் இருக்க முடியாது. சம்ப்ந்தனுக்கு துரோகம் செய்தீர்கள். மாவை ஐயாவிற்கு அழுத்தம் கொடுத்து அவரது மரணத்திற்கு காரணமானீர்கள். அவருக்கு நீங்கள் மரியாதை செலுத்துவதாக இருந்தால் அவருடைய நினைவுதினத்திற்கு முன் உடனடியாக பதவிகளில் இருந்து வெளியேறி விடுங்கள். - எனத் தெரிவித்தார்.

# உடுத்துறையில் நேற்று நேருக்கு நேர் மோதிக்கொண்ட மோ.சைக்கிள்கள்





(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படி பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்து சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்று மாலை 04.00 மணி அளவில் மருதங்கேணியில் இருந்து உடுத்துறை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் உடுத்துறையில் இருந்து மருதங்கேணி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பலத்த காயமடைந்து மருதங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மருதங்கேணி போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொண்டு வருகின்றனர்.

# இணுவில் அறிவாலயம், மக்கள் கலை இலக்கியப் பேரவை இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்




இணுவில் அறிவாலயமும் மக்கள் கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்தும் இளையோர் புத்தக அரங்கக் கொண்டாட்டம் நாளை 2026 ஜனவரி 17 மற்றும் நாளை மறுதினம் 18 ஆம் திகதிகளில், இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

வாசிப்பின் முக்கியத்துவத்தையும் மகத்துவத்தையும் கொண்டாடும் பெருவிழாவாக இந்நிகழ்வு நடத்தப்படுகின்றது.

அதேவேளை சிறுவர்கள் பங்குபற்றும் கலை நிகழ்ச்சிகளும், நாடகமும், நாளை ஜனவரி 17 மாலை 5 மணியளவில் இடம்பெறவிருக்கிறது.

நாளை சனிக்கிழமை காலை 9 முதல் மாலை 5 வரையிலும், நாளை மறுதினம் ஜனவரி 18 ஞாயிற்றுக் கிழமை காலை 9 முதல் பிற்பகல் 1 மணி வரையும் சிறுவர்களுக்கான நூற் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு லண்டனைச் சேர்ந்த அறிவு அறக்கட்டளை அனுசரணை வழங்குகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் ஆய்வாளர் என்.சத்தியமூர்த்தி நேற்று தைப்பொங்கல் தினத்தில் மறைவு



தமிழகத்தைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளரும் இலங்கை விவகாரத்தில் அதிக ஆழமான புலமைத்துவம் கொண்ட அரசியல் ஆய்வாளருமான என்.சத்தியமூர்த்தி (வயது 73) சிறிது கால சுகவீனத்தின் பின்னர் நேற்று தைப் பொங்கல் தினத்தன்று சென்னையில் காலமானார்.

இந்தியாவின் சர்வதேச அரசியல் தொடர்பான விடயங்கள் குறித்து நீண்ட காலமாக எழுதி வந்தவர் அவர் குறிப்பாக இலங்கை, மாலைதீவு விவகாரங்கள் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்து வந்தவர். புதுடில்லியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் "ஒப்சேவர் ரிசேர்ஜ் ஃபவுண்டேஷன்" என்ற சிந்தனைக் குழாமின் சென்னைப் பிரிவின் தலைவராக அவர் செயல்பட்டு வந்தவர். இலங்கையில் தனியார் தொலைக்காட்சியில் சில வருடங்கள் பணியாற்றிய சத்தியமூர்த்தி, 'காலைக்கதிர்' பத்திரிகையில் நீண்ட காலம் தொடர்ந்து பத்தி எழுத்தாளராகக் கட்டுரைகளை எழுதி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் மூவின அரசியல் தலைவர்களோடும் மிக நெருக்கமான ஊடாட்டத்தை அவர் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது மனைவியையும் ஒரே மகனையும் விட்டு அவர் பிரிந்துள்ளார்.




# கொடுக்குளாயில் மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி கோர விபத்து

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் பகுதியில் நேற்று மாலை விபத்துச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது மருதங்கேணியிலிருந்து ஆழியவளை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கொடுக்குளாய் பகுதியில் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது காயம் அடைந்த இளைஞர் மருதங்கேணி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அதிக வேகம் காரணமாக இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இந்த விபத்தில் மின்கம்பம் முற்றாக சேதம் அடைந்துள்ளது.

விபத்து தொடர்பாக மருதங்கேணி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
விவசாயத் திணைக்களம்
Department of Agriculture

# டித்வா புயலால் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக 800 மில்லியன் ரூபா இழப்பீடு

டித்வா புயலினால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக இது வரை இழப்பீடாக 800 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

22,000 விவசாயிகளுக்கு இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் துஷார விக்ரமராச்சி குறிப்பிட்டுள்ளார்.

மரக்கறி செய்கைகள் அழிவடைந்தமைக்காக 18,200 விவசாயிகளுக்கு 660 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

புயலினால் சோளச்செய்கை பாதிக்கப்பட்ட 1000 விவசாயிகளுக்கு 35 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் விவசாய திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# முழு நாடும் ஒன்றாக சுற்றிவளைப்பில் 69,318 பேர் கைது; 1,446 பேருக்கு காவல்



முழுநாடும்ஒன்றாகசுற்றிவளைப்பின் கீழ் 69,318 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு வகையான நச்சுப் போதைப் பொருள்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட 69,960 சுற்றிவளைப்புக்களின்போதுசந்தேகநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுள் 1446 பேருக்கு தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், 58 சந்தேகநபர்கள் மீது சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் பாவனை தொடர்பில் கைது செய்யப்பட்ட 1384 பேர் புனர்வாழ்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நச்சுப்போதைப்பொருள்களின்பரவலினால் ஏற்படும் சுகாதாரம், சமூக பொருளாதார சீரழிவை தடுப்பதற்கும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முழு நாடும் ஒன்றாக தேசிய செயற்றிட்டம் கடந்த வருடம் ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படுகின்றது.

# அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் அரசுக்கு 1.118 பில்லியன் ரூபா வருமானம்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம், 2025 ஆம் ஆண்டில் வருமான வரி மற்றும் திறைசேரி வரிகள் மூலம் அரசாங்கத்திற்கு 1.118 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 173 சதவீத பாரிய வளர்ச்சியாகும். இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள விபரங்களின் படி,சொந்த வருமான மார்க்கங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் 26 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்தோடு, நாடு தழுவிய ஒசுசல மருந்தக வலையமைப்பின் வருமானம் 9 சதவீதத்தால் உயர்ந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அரச மருந்தக கூட்டுத்தாபன வரலாற்றில் முதல்முறையாக, சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவிற்கான (DHS) நிதி ஒதுக்கீடுகள் அனைத்தையும் பயன்படுத்தி, மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான “இன்டெண்ட்” (Indent) கட்டளைகளை முழுமையாக வழங்கியுள்ளது.

SPC
State Pharmaceuticals
Corporation of Sri Lanka

கிரிபத்கொட, நாரஹேன்பிட்டிய, கேகாலை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் ஐந்து புதிய ஒசுசல கிளைகள் திறக்கப்பட்டமை வருமான அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதுடன், வினைத்திறனான நிர்வாகத்தினால் நஷ்டத்தில் இயங்கிய பல கிளைகள் மீண்டும் இலாபமீட்டும் நிலைக்கு வந்துள்ளதாக கூறப்படுகின்றது.

அத்தோடு,மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்த ISO 17025 ஆய்வக அங்கீகாரச் செயல்முறையை SPC ஆரம்பித்துள்ளது.

சந்தைக்குவிடப்படும்அனைத்துமருந்துகளும் நான்கு கட்டக் கடுமையான தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதாக அமைச்சு உறுதி அளித்துள்ளது.

மேலும், முறையான மருந்துப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த நாடு முழுவதும் சுகாதார முகாம்கள் மற்றும் பொது விழிப்புணர்வுத் திட்டங்களையும் கூட்டுத்தாபனம் முன்னெடுத்து வருகின்றது.




# டித்வா சூறாவளி பாதிப்பை மதிப்பீடு செய்ய நாணய நிதியக் குழு இலங்கைக்கு வருகை

சர்வதேச நாணய நிதியத்தின் விசேட குழுவொன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இந்தக் குழு எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடுவதற்கும், நாட்டின் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்திற்கான கொள்கை தாக்கங்களைப் பற்றி விவாதிப்பதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் உண்மையை கண்டறியும் குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பு காலி முகத்திடல் வீதியில் மின்சாரக் கம்பத்தில் ஏறிப் போராட்டம்



கொழும்பு காலி முகத்திடல் வீதியில் உள்ள மின்சாரக் கம்பம் ஒன்றில் ஏறி நபர் ஒருவர் நேற்று காலை போராட்டத்தில் ஈடுபட்டார்.

களனி பொலிஸாரால் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியே அவர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நபர் மின்சாரக் கம்பத்தின் உச்சியில் ஏறியதுடன், தனது கழுத்தில் கயிற்றை மாட்டிக்கொண்டு உயிர்மாய்ப்பு செய்து கொள்ளப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு 1990 சுவசெரிய அவசர நோயாளர்காவுவண்டி சேவை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விரைந்தனர்.

அவரைப் பாதுகாப்பாகக் கீழே இறக்கி முதலுதவி வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இந்தப் போராட்டத்தினால் காலி முகத்திடல் பகுதியில் மக்கள் கூட்டம் அதிகரித்ததுடன், அப்பகுதியூடான போக்குவரத்திலும் சிறு தாமதங்கள் ஏற்பட்டன.



# டித்வா புயலால் 95 வீதமான உட்கட்டமைப்புகளுக்கு சேதம்

## ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் மதிப்பீடு

2004 சுனாமிக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட மிக மோசமான அனர்த்தமாகக் கருதப்படும் டித்வா புயலின் தாக்கத்தால் 95 வீதமான உட்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

22 மாவட்டங்களில் உள்ள 85 பிரதேச செயலகப் பிரிவுகளில் நடத்தப்பட்ட ஆய்வில், 95 வீதமான பகுதிகளில் வீடுகள், வீதிகள், கைத்தொழில் மற்றும் சமூக உள்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 டிசம்பரில் வெளியிடப்பட்ட புவிசார் பகுப்பாய்வின்படி, நாட்டின் நிலப்பரப்பில் சுமார் 20 வீதமான பகுதி வெள்ளத்தில் மூழ்கியிருந்ததுடன், ஏறத்தாழ 2.3 மில்லியன் மக்கள் பாதிப்புக்குள்ளாகினர்.

93 வீதமான பதிலளிப்பாளர்கள் தமது பகுதியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பயிர் மற்றும் கால்நடை இழப்புகள், வேலை இழப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டமை ஆகியன சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

கட்டுமானப் பொருட்கள் தட்டுப்பாடு, திறன்கொண்ட தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் நிதி நெருக்கடி என்பன மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளானவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் போன்ற நலிவடைந்த பிரிவினராவார்.

மக்கள் பெரும்பாலும் அரச உதவி (76 வீதம்) மற்றும் சர்வதேச அமைப்புகளின் (45 வீதம்) உதவிகளை நம்பியுள்ளனர்.

எனினும், 40 வீதமான மக்கள் முறைசாரா கடன்களை நாடியுள்ளமை, குடும்பங்களின் கடன் சுமை அதிகரிப்பதைக் காட்டுகிறது.

சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு 95 பில்லியன் ரூபா நிதியுதவி வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதில் 3 வீத சலுகை வட்டி கடன் திட்டமும் உள்ளடங்கும்.

எனினும், முறைசாரா துறையில் பணிபுரிபவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் வலியுறுத்தியுள்ளது.

வெள்ளம் காரணமாக நீர் மாசடைதல், மண் அரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் சேதமடைதல் போன்ற நீண்டகாலப் பாதிப்புகள் குறித்தும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# போதைக்கு அடிமையானவர்களுக்கு விரைவில் ஒருநாள் சிகிச்சை திட்டம்



போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்காக ஒருநாள் சிகிச்சை மற்றும் 03 புனர்வாழ்வு மத்திய நிலையங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளில் குறித்த புனர்வாழ்வு மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என சபையின் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு பிரிவின் பணிப்பாளர் ஷாந்த கமகே தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஒருநாள் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மத்திய நிலையம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த மத்திய நிலையத்தில் சிகிச்சைக்காக வருவோருக்கு ஒரே நாளில் சிகிச்சையை பெற்று வீடு திரும்ப முடியும் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு பிரிவின் பணிப்பாளர் ஷாந்த கமகே தெரிவித்துள்ளார்.



# இலங்கை விமானப்படைக்கு 10 ஹெலிக்கொப்டர்கள்

## இலவசமாக வழங்கும் அமெரிக்கா

10 ஹெலிக்கொப்டர்களை அமெரிக்கா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கவுள்ளது.

இந்த ஹெலிக்கொப்டர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

பெல் ஹெலிக்கொப்டர் டெக்ஸ்ட்ரான் யு.எஸ்.ஏ. தயாரித்த புகழ்பெற்ற பெல் 206டீ-3 ஜெட் ரேஞ்சரின் இராணுவ மாறுபாடான 10 TH-57 சீரேஞ்சர் ஹெலிக்கொப்டர்களை அமெரிக்க அரசு இலங்கைக்கு வழங்குகின்றது.

வொஷிங்டனில் இலங்கை தூதரகத்தின் தகவல் படி, இந்த அதிக திறன் கொண்ட ஹெலிக்கொப்டர்கள் தற்போது ஏற்றுமதிக்கான இறுதி தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வான்படையின் பயிற்சி, பேரிடர் மீட்பு, தேடல் மற்றும் மீட்பு பணிகளுக்காக இவை பயன்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இலங்கைக்கான பாதுகாப்பு உறவுகள் இதன்மூலம் மேம்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.












# வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா

வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா சேவா சனசமூக நிலையமும் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்திய வினோத விசித்திர பட்ட வல்லுனர் சர்வதேச பட்டத் திருவிழா நேற்று வல்வெட்டித்துறை உதய சூரியன் விளையாட்டு மைதானத்தல் இடம்பெற்றது.

இந்த பட்டத் திருவிழாவில் 80 வரையான வினோத விசித்திரப் பட்டங்கள் ஏற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி கலந்து கொண்டார்.

(படம் - மு.மதிவாணன்)















# வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா












# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த மாடுபிடி வீரராக பாலமுருகன் தேர்வு

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் 22 காளைகளை அடக்கி சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்ட வலையங்குளம் பாலமுருகனுக்கு கார் பரிசும், சிறந்த காளைக்கான உளவியந் திரம் பரிசை அவனியாபுரம் விருமாண்டி மந்தை முத்துக்கருப்பன் காளைக்கும் அமைச்சர் பி. மூர்த்தி வழங்கினார்.

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி நேற்று வியாழக் கிழமை காலை 7 மணிக்கு தொடங்கியது முதல் இறுதி சுற்று வரை விறுவிறுப்பாக நடந்தது. 940 காளைகள் அவிழ்க்கப்பட்டன. 47 காளைகள் தகுதி நீக்கம் செய்யப்பட்டன. மாடுபிடி வீரர்கள் 30 பேர் மற்றும் பார்வை யாளர்கள், மாட்டு உரிமையாளர்கள் என 50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இந்தப் போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் பரிசுக்கான இறுதிச்சுற்று விறுவிறுப்பாக நடந்தது. இதில் சிறந்த மாடுபிடி வீரர்களாக முதலிடம் பெற்ற வளையங்குளம் பாலமுருகன் 22 காளைகளை அடக்கினார். அவருக்கு முதல் பரிசாக 8 லட்சம் இந்திய ரூபா மதிப்புள்ள நிஸான் கார் வழங்கப்பட் டது.

2 ஆவது இடம் பெற்ற அவனியா புரம் கார்த்திக் 17 காளைகளை பிடித்தார். அவருக்கு மோட்டார்சைக்கிள் பரிசாக வழங்கப்பட்டது. இவர் கடந்த முறை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த மாடு பிடி வீரராக இரண்டாவது இடம் பரிசு பெற்றவர்.

சிறந்த காளையாக அவனியாபுரம் விருமாண்டி மந்தை முத்து கருப்பன் காளை முதல் பரிசு வென்றது. இக்காளை 60 வினாடிகள் மைதானத்தில் நின்று விளையாடியது. இந்த காளையின் உரி மையாளருக்கு 9 லட்சம் இந்திய ரூபா மதிப்புள்ள உளவியந்திரம் பரிசு வழங்கப் பட்டது. ஜி.ஆர், கார்த்திக் என்பவரின் காளை 2 ஆவது பரிசு பெற்றது. இந்த காளை 25 வினாடிகள் விளையாடி யது.

சிறந்த வீரர், காளை உரிமையாளர் ஆகியோருக்கு அமைச்சர் மூர்த்தி பரி சுகளை வழங்கினார்.

# 77 ஆவது குடியரசு தின விழாவின் விருந்தினர்களாக பங்கேற்க உள்ளனர் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள்



ஐரோப்பிய ஆணையத்தின் தலை வர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் அன் டோனியோ கோஸ்டா ஆகியோர் இந்த ஆண்டு நடைபெறும் இந்திய குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினர் களாகப் பங்கேற்கின்றனர்.

குடியரசு தின விழாவுக்காக ஐரோப் பிய ஒன்றிய அதிகாரிகள் அழைக்கப்ப டுவது இதுவே முதல் முறையாகும். இந்த இரண்டு ஐரோப்பிய கவுன்சில் தலை வர்கள் ஜனவரி 25 முதல் ஜனவரி 27 வரை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணமாக வருகின்றனர். மேலும், அவர்கள் ஜனவரி 27 அன்று நடைபெறும் 16 ஆவது இந்திய - ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டிற்கும் இணைத் தலைமை தாங்குவார்கள்.

இந்த வருகையின் போது, ஐரோப் பிய ஆணையத் தலைவர் லேயன் மற் றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் கோஸ்டா ஆகியோர் குடியரசுத் தலை வர் திரவுபதி முர்முவை சந்திப்பார்கள் என் றும் பிரதமர் நரேந்திர மோடியுடன் தனிப் பட்ட மற்றும் தூதுக்குழு அளவிலான பேச்சு வார்த்தைகளை நடத்துவார்கள் எனவும் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரி வித்துள்ளது.

இந்தியா - ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய் யப்படும் இந்திய - ஐரோப்பிய கவுன்சில் வர்த்தக மன்றத்திலும் அவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றி யம் 2004 முதல் இணைந்து பணி யாற்றி வருகின்றன. மேலும் இரு இந் தியா - ஐரோப்பிய யூனியனின் வர்த்தக ஒப்பந்தமும் இறுதி கட்டத்தில் உள்ளன.

இந்திய வர்த்தகச் செயலாளர் ராஜேஷ் அகர்வால், தலைவர்களின் உச்சிமாநாட் டிற்கு முன்பே இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு இரு தரப்பினரும் மிக அரு கில் இருப்பார்கள் என்று கூறியுள்ளார்.

## ஈரானில் தொடர் பதற்றம்:

# இந்தியர்களை மீட்க மத்திய அரசு தீவிரம்



ஈரானில் நிலவும் உள்நாட்டுப் போராட்டங்கள் மற்றும் அங்கு நிலவும் பதற்றமான சூழலைக் கருத்தில் கொண்டு, இந்தியர்களைப் பாதுகாப்பாக தாயகம் அழைத்துவர மத்திய வெளியுறவு அமைச்சகம் தீவிர ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

ஈரானில் உள்ள இந்தியர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்குத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் கையாளுமாறு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோருக்குப் பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

முதற்கட்டமாக அங்குள்ள இந்தியர்கள் விமானங்கள் மூலம் வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நிலைமை மேலும் மோசமடைந்தால், அவர்களை மீட்க இந்திய விமானப்படை மற்றும் இந்தியக் கடற்படை கப்பல்கள் மற்றும் விமானங்கள் பயன்படுத்தப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானில் உள்ள இந்தியர்கள் அங்கு கிடைக்கும் எந்தவொரு போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தியாவது உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து ஆலோசித்துள்ளார்.

ஈரானில் மோசமடைந்து வரும் பொருளாதாரம் மற்றும் தற்போதைய ஆட்சிக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்களில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். இது ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இந்தியக் குடிமக்கள் மறு உத்தரவு வரும் வரை ஈரானுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

# அவுஸ்திரேலியாவில் கடும் புயலுடன் பெருமழை; கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டன வாகனங்கள்



அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தின் தெற்கு கடற்கரைப் பகுதியில் ஏற்பட்ட கடும் புயல் மற்றும் திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

விக்டோரியா மாநிலத்தின் தெற்கு கடற்கரைப் பகுதியில் நிலவிய சீரற்ற கால நிலையைத் தொடர்ந்து ஏற்பட்ட கடும் மழையினால் ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன.

இதனால் கடற்கரைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஏராளமான வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு கடலில் சங்கமித்துள்ளன.

இந்த பிரதேசத்தில் சில மணித்தியாலங்களுக்குள் சுமார் 169 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அந்நாட்டின் வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தத் திடீர் மழையினாலேயே குடியிருப்புப் பகுதிகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்தநிலையில், அப்பகுதியில் ஏற்பட்டுள்ள அவசர நிலையைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளில் அந்நாட்டு காவல்துறையினரும் அவசர சேவைப் பிரிவினரும் தீவிரமாக ஈடுபட்டு வருவதுடன், வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் இன்னும் முழுமையாக மதிப்பிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 16.01.2025




உங்கள் முயற்சிகளில் வளர்ச்சியும் வெற்றியும் காணப்படும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகையில் இன்றைய நாள் சுமுகமாக இருக்கும்.

உங்களின் அருமையான செயல் திறன் மூலம் உங்களுக்கு வெகுமதியும் அங்கீகாரமும் கிடைக்கும். உங்களின் புத்திசாலித்தனம் மற்றும் சிறந்த செயல் மூலம் வெற்றிக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். இதனால் அவருக்கு உங்கள் மீது நம்பிக்கை பெருகும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. இன்று உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று ஆற்றல் மிக்க மன நிலை காணப்படும். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகுமுறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பதற்றமாக காணப்படுவீர்கள். தியானம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய கடினமாக உழைக்க வேண்டும். அனைத்தையும் பொறுமையாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணிச்சுமைகள் கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடம் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதால் கவனமாக உரையாட வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். இம்மாதிரி அணுகுமுறையால் நீங்கள் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். அனுசரையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக அதிக நேரம் பணி செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது. உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகினால் இந்த நாளை இனிமையாக ஆக்கலாம்.

இன்று பண வரவு காணப்படாது. பணப்பற்றாக்குறை காரணமாக கவலை ஏற்படும்.

கீழே விழுந்து அதனால் பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான நாள். வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டாலும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்களின் நம்பிக்கையான போக்கு காரணமாக பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் பலன்கள் கிடைப்பது உறுதி. உங்கள் நேர்மையான முயற்சி மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் செயல்திறனின் தரம் மேம்படும்.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இன்றைய நாளை ஒன்றாக இணைந்து கொண்டாடி திருப்தியடைவீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது. உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று ஆற்றல் அதிகமாகக் காணப்படும்.




இன்று சாதகமான நாளாக அமையாது. மனதை ஓய்வாகவும் அமைதியாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகுமுறையும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்படலாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று சிறிது பதட்டமாக காணப்படுவீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜபங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.01.2025




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். என்றாலும் உங்கள் பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு கொண்டு இன்றைய நாளை வெற்றி கரமாக ஆக்குவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பயணத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்படும் என்பதால் இனிமையான பயணமாக இருக்காது.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பழக வேண்டும். நல்ல உறவை பராமரிக்க சிறந்த அணுகுமுறை தேவை.

வரவும் செலவும் இணைந்து காணப்படுகின்றது. நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை அனுபவிக்க இயலாது.

இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள்.




உங்கள் பொறுப்புகளை திறமையாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். பொறுமை காப்பது நல்ல பலனைத் தரும். விரைவாக முடிவெடுக்க முனைவீர் கள். இந்த உணர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் திறமையான முறையில் பண–ியாற்ற பணிகளை நன்கு கையாள வேண்டும். முன்கூட்டி திட்டமிட்டால் செயலில் வெற்றி பெறலாம்.

உங்கள்துணையிடம்அகந்தைப்போக்கைவெளிப்படுத்து வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். மனம் திறந்த பேச்சும் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலமும் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணம் குறைந்து காணப்படும். குடும்பத்திற் காக பணம் செலவு செய்ய நேரும். பணத்தை சேமிக்க இயலாது.




இன்று லாபகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். நீங்கள் சிறந்த தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

திறமையாகப் பணியாற்றி அதற் குரிய அங்கீகாரம் பெறுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவீர் கள். நீங்கள் உங்கள் துணையுடன் உல்லாசமாக பழக வேண்டும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்து வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன்று திடமாகவும் சௌகரியமாகவும் உணர்வீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று எடுக்கும் சிறந்த முடிவுகள் வளர்ச்சி பெற உதவும். நீங்கள் உறுதியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் ஒளிவு மறைவின்றி பேசுவீர் கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று பாதுகாப்பாக இருக்க சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்கள் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.

# செல்வி தானியா சுரேந்திரனின் பரத அரங்கேற்றம் நாளை மாலை

நிர்த்தனா நடனப்பள்ளி யின் இயக்குநரும் நிறுவு நருமான நடன திலகம் ஸ்ரீமதி சிவானந்தி ஹரி தர்ஷனின் மாணவியும் குருசுவாமி சுரேந்திரன் மற்றும் அருணா சுரேந்தி ரன் தம்பதியினரின் புதல்வி யுமான செல்வி தானியா சுரேந்திரனின் பரதநாட் டிய அரங்கேற்றம் நாளை 17ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்ட பத்தில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந் தினராக கொக்குவில் 'கலா பவனம்' இயக்குநர் ஸ்ரீமதி சாந்தினி சிவநேசனும் கௌரவ விருந்தினராக கொழும்பு நாட்டிய கலா மந்திர் நிறுவுநரும் இயக்கு நருமான ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனும் கலந்து சிறப்பிப்பார்கள்.



